**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 109/2020 |
| Name | : | Selvadeepa |
| P.W. | : | 5 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.01.2026

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 திருப்பூர் தெற்கில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வேலை செய்கிறேன். கடந்த 15.07.2019 அன்று கணியூர் காவல் நிலைய குற்ற எண்.140/2019 இதச பிரிவுகள் 279, 304(A) ன் படி பதிவு செய்யப்பட்ட வழக்கு சம்மந்தப்பட்ட விபத்து வாகனமான TN 10 AD 9996 என்ற கொண்ட Mercedes benz வாகனத்தை ஆய்வு செய்தேன். ஆய்வில் வாகனத்தின் பதிவுச் சான்று மற்றும் காப்புச் சான்று, ஓட்டுநர் உரிமம் சரியாக இருந்தது. வாகனத்தில் ஏற்பட்ட சேதாரங்கள் குறித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். வாகனத்தின் தடைதிறன் 64 சதவீதம் இருந்தது. **TN 10 AD 9996 என்ற கொண்ட Mercedes benz வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN 41 Y 7116 என்ற கொண்ட TVS XL இருசக்கர வாகனத்தை 22.07.2019 அன்று ஆய்வு செய்தேன். ஆய்வில் வாகனத்தின் ஆவணங்கள் மற்றும் ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்கப்படவில்லை. வாகனத்தில் ஏற்பட்ட சேதாரங்கள் குறித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். **TN 41 Y 7116 என்ற கொண்ட TVS XL வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வாகன விபத்து எவ்வித இயந்திர கோளாரினாலும் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். இருசக்கர வாகனத்திற்கு இயங்கும் நிலையில் இல்லாததால் அதற்கு தடை திறன் சோதிக்க இயலவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) எதிரி ஓட்டி வந்ததாக சொல்லப்படும் வாகனத்திற்கு அந்த சமயத்தில் உரிய காப்பீடு இருந்தது என்றால் சரிதான். எதிரிக்கும் ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். இறந்து போன நபர் ஓட்டி வந்த TVS XL இருசக்கர வாகனத்திற்கு ஓட்டுநர் உரிமம் மற்றும் காப்பீடு இல்லை என்றால் சரிதான். இறந்து போன நபர் இருசக்கர வாகனத்தில் முறை தவறி வந்து மோதினாலும் நான்கு சக்கர வாகனத்திற்கு இந்த சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.01.27 12:48:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்